முருகப்பெருமான் துணை

**மகான் குருதட்சணாமூர்த்தி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.06.2023**, சனிக்கிழமை

1. தருமத்தின் தலைவனாக வந்த
தவராஜனே ஞான தேசிகனே
பெருமைபட உன் அன்னதானம்
பேருலகமெல்லாம் வலம் வர

2. வருகவே வையகம் மாறுமென
வழங்குவேன் அறிவுரை ஆசி
உறுதிபட சோபகிருது விடை திங்கள்
உயர்வான இருபான்திகதி காரிவாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 20 ம் நாள், 03.06.2023, சனிக்கிழமை)

3. வாரமதில் குருதட்சணாமூர்த்தி யானும்
வையகம் பாதுகாப்புற உரைப்பேன்
ஆரவாரமின்றி அரங்கன் செய்யும்
அறமே உலகை வலம் வந்து

4. வந்துமே தரும வேலியிட்டு
வரலாறு காணும்படி மாற்றம்
சிந்தை தெளிவு மக்களிடை
சிறப்பறிவாகத் தந்து இனிதே

5. இனிதே எங்கும் எதிலும் தருமம்
எல்லாம் தயை வழிமுறையாக
கனிவேலவன் ஆசிபடவே
கலியில் தருமவான்கள் பெருகி

6. பெருகியே செயல்களில் தெளிவு
பேருலகில் பேதம் அனுகிடா
வறுமை கட்டம் நெருங்கா
வள்ளல் தன்மையாக மாற்றி

7. மாற்றியே எல்லாம் ஞானிகள்
மகத்துவமே என அறியும்படி
ஆற்றல் தந்து அரங்கமகான்
அறமாக வரங்கள் தந்திட

8. தந்திட பிரணவக் குடிலை
தக்கபடி அனுகி மக்கள்
எந்தவித ஐயமுமில்லா சடுதி
ஏற்று சரணாகதி காண

9. காணவே ஞானம் உறுதி
கரும வினைகளை வென்று
தானம் குறையா சேவை வழி
தனிப்பெருஞ் சக்திகளாக மாறுவர்

10. மாறவே ஞான வேலியிட்ட
மகான் வழி காட்டலில் தான்
ஆறுமுகக் கடவுளை காணும்
அதிசயம் அற்புதம் கண்டடைவர்

11. அடையவே ஞானிகள் நிறைந்த
ஆறுமுகன் தலைமை ஏற்ற
சோடையிலா ஞான ஆட்சி மலரும்
செப்பிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—